**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 594/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W-3 |
| Name | : | தங்கமாரியப்பன், வயது 43 |
| Father Name/Husband Name | : | ராஜா |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | நகை கடை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of October 2023.

**(2 வது எதிரி ஆஜர் 1 வது எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

__முதல் விசாரணை__

1. நான் தற்போது கோவில்பட்டி தெற்கு பஜாரில் நகை கடை வைத்துள்ளேன். கடந்த 1307.2020 ஆம் தேதி தெப்பக்குளத்தெருவில் கிழக்கு காவல்நிலைய ஆய்வாளர் வந்து காலை 10.00 மணிக்கு சீட்டிங் கேசிற்காக வரைபடம் வரைந்தார்.
2. எதற்காக என்றுகேட்டேன் சீட்டிங் கேஸ் என்று சொன்னார்கள். அதில் நானும் எனது நண்பர் கணேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான்.
3. **(அந்த ஆவணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

__எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை__

1. நீங்கள் நகைகளை வாங்கி விற்கும் தொழில் செய்கிறீர்கள் என்றால் சரிதான். உங்கள் தொழிலுக்கு GST பதிவு உண்டு என்றால் சரிதான். GST க்கு பேரேடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த பேரேடுகளை பார்த்தால் குறிப்பிட்ட நாளில் எவ்வளவு நகை இருப்பில் இருந்தது எவ்வளவு விற்பனை செய்யப்பட்டுள்ளது அதன் தொகை விவரங்கள் தெரிய வரும் என்றால் சரிதான்.
2. அ.சா.1 ன் கடைக்கும் உங்கள் கடைக்கும் எவ்வளவு தூரம் என்றால் அவரது கடை மாடியில் உள்ளது எனது கடை கீழே உள்ளது. அ.சா.1 ன் கடைக்கு போவதாக இருந்தால் உங்கள் கடையை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல வேறு பாதைகளும்

உள்ளன.

3. உங்கள் கடை உள்ள காம்பிளகிசில் சி.சி.டி.வி கேமாரா உள்ளதா என்றால் இல்லை. எல்லா நகைகடைகளிடும் சி.சி.டி.வி கேமராக்கள் வைக்க வேண்டும் என்பது கட்டாயம் என்றால் தற்போது தான் சொல்லியுள்ளார். உங்கள் காம்பிளகிசின் முன்னால் சி.சி.டி.வி கேமராக்கல் உள்ளதா என்றால் இருக்கலாம் நான் கவனித்ததில்லை.
4. உங்கள் கடைக்கு எதிரே என்ன கடை உள்ளது என்றால் சேலம் தங்க மாளிகை என்ற கடை உள்ளது. தெற்கு பஜாரில் சி.சி.டி.வி கேமராக்கள் உள்ளதா என்றால் இருக்கலாம் நான் கவனிக்கவில்லை. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரை யார் எழுதினார்கள் என்று தெரியாது என்றால் என் முன்னிலையில் ரைட்டர் எழுதினார்.
5. அதில் அடித்தல் திருத்தல் இருந்ததா என்றால் பார்த்தால் தெரியும். நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் மேலே எழுத்துக்கள் கலக்கமாகவும் கீழே நெருக்கமாகவும் எழுதப்பட்டுள்ளது என்றால் அப்படி இல்லை. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் உங்கள் முன்பு இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.
6. நீங்கள் அ.சா.1 ற்கு வேண்டப்பட்டவர் என்பதால்அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.